ஓலை 43 | ஓசை 147 | ஜூலை 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால், ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை.

**Translation:**

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

**Explanation:**

Amongst all attainable excellence there is none equal to that of being free from envy towards others.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# வாழ்க்கை

வீசுகின்ற காற்று
எனக்காக வீசவில்லை.
விடிகின்ற சூரியன்
எனக்காக விடியவில்லை.
பால் நிலவும்
எனக்காக காயவில்லை.
பொழிகிற மழை
எனக்காக பொழியவில்லை.
இப்படி
அனைத்தும்
நிகழ்ந்து முடிகிறது
பொதுவாய்.
என் வாழ்க்கை மட்டும்
எனக்கானதாய்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# வறட்சி

இதய நரம்பு வரண்டு போச்சு
ஈரங் கூட காஞ்சு போச்சு
நிதமும் ஏக்கம் கூடிப் போச்சு
நீளும் வறுமை பழகிப் போச்சு
வான மிங்க பாத்து பாத்து
வாடும் வாழ்வும் வழக்க மாச்சு
ஏனோ வானும் பொய்த்து போச்சு
எட்டாக் கனியா நீரு மாச்சு

பச்சை எல்லா காஞ்சு போச்சு
பாழும் வயிறு ஒட்டிப் போச்சு
மிச்ச மில்லா வினைகள் எல்லாம்
மிடற தரவும் மறந்து போச்சு
வெட்டி வெட்டி சாய்க்கும் போது
வேரு துடிச்சு சாகும் போதும்
எட்ட நின்னு பாத்த தால
ஏங்கு நீயும் என்ன போல

இயற்கை இங்க இன்னல் பாடம்
இந்தா என்று தந்து போக
இயக்க மாக நாமும் கூடி
இனிய உலகம் படைக்க வாங்க
கொடுத்த நல்ல செல்வ மெல்லாம்
கொண்டு கொன்று சேதம் செய்ய
கெடுதல் தானே மீண்டும் முளைக்கும்
கேள்வி ஞானம் சொன்ன சொல்லு.

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# காலையில் ஓர் நிமிடம்!

சூழ்ந்திருக்கும் இருளை
விரட்டி வரும் சூரியனும்
இளம் தென்றலுக்குள்
அசைந்தாடும் மரக்கிளைகளின்
இடையே கசியும்
அதன் கதிர்களும்
ஆங்காங்கே படிந்திருக்கும்
பனித்துளிமேல்
பட்டு தெறிக்கும் அதன் சுடர்களும்
கதிரவனை கண்டு
முகம் மலரும் செந்தாமரைகளும்
காலை பொழுதை வரவேற்க
இசைக்கப்படும் குயிலோசைகளும்
பசி போக்க இறை தேடி
அணி அணியாய் பறக்கும் பட்சிகளும்
பூக்களால் ஈர்த்தெடுக்கப்படும்
வண்டுகளின் ரீங்காரமும்
வெள்ளை வெள்ளையாய் தெருவெங்கும்
பறந்து தெரியும் பள்ளி சிட்டுகளுமே
என் மனமதனை கொள்ளை இடுகிறது
காலையில் ஓர் நிமிடத்தில்.

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# கலைக் கூத்தாடிகள்

சிறந்த படைத்தளபதி இல்லையேல்
சிப்பாய்களுக்கு ஏது வேலை?
இந்நிதர்சனம் அறிவோர் உண்டோ இங்கே?

போரில் வென்ற பின்னும்
மாண்ட வீரனுக்காக தலை கவிழும் மாண்பை
பார்வையாளனிடம் எதிர்பார்க்க முடியுமோ?

வென்றால் யானே ராஜா என்பவன்
தோற்றால் யானே கள்வன் எனக் கூறா
வாய்ச் சொல்லில் வீரன் தான் உள்ளனர் பலர்.

மகுடிக்கு மயங்கும் பாம்பு போல்
புகழுக்கு மயங்கும் புத்தி கேட்ட மூடர்கள்!
அரியணை தகுதி இல்லா ஆணவக்காரர்கள்!



கவிஞர் மதுகை,திருச்சி

# கனவின் பயணம்

கலையும் வரைதான்
என்றாலும் கூட
இன்னும் கொஞ்சம்
நீடித்திருக்கட்டும்
கனவுகளுடனான
என் மகிழ்வின்
பயணம்.



கவிஞர் கீர்த்தனா பு,பி.கே.ஆர் மகளிர் கலைக்கல்லூரி கோபி

# கேளாத ஓசைகள்

பட்டணத்து வீதிகளில்
கருக்கலிலே கூவும் சேவலோசை
வலசை போகும் பட்சிகளின் ஓசை
ஆநிரைகளின் அம்மா என்ற ஓசை
எங்கே என்று தேடினாலும்
காதில் கேட்காத ஓசை!
ஆளரவமற்ற தெருக்களில்
மதிய நேரம் மிதிவண்டி
மிதித்தபடி தனியனாய் ஒய்யாரமாய்
விசிலடித்து செல்லும் ஓசை
பரபரப்பான சூழலில் அமுங்கி
போய்விட்ட ஓசை!
ஊரடங்கிய இரவு நேரம் எங்கிருந்தோ
ஒலிக்கும் வானொலியின் பாடலோசை
தொலைந்து போன சொர்க்கம்!
நீதியென்றும் நேர்மையென்றும்
இடித்துரைக்கும் மனசாட்சியின் ஓசை
மனிதனின் தொலைந்து விட்ட
தொலைத்து விட்ட ஓசை!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை 119

# நாட்டுப்புறப்பாடல்

வயல் காடதனை நன்றாக உழுதாச்சு
நெல்லு சோளம் கம்பு விதைத்து
பொழுதெல்லாம் காட்டைக் காக்க
தங்கரத்தினமே!
முயற்சியதைச் செய்திடுவோம்
பொன்னு ரத்தினமே!

அள்ளி அள்ளி தூவி தெளிச்சா
அழகான சோளமுத்து
மெள்ள மெள்ள துளிர் விடுமே
தங்கரத்தினமே!
ஆழமாக வேரூன்றும் பொன்னு ரத்தினமே!

கறவையினம் ஓடிவரப்
பறவையெலாம் சுற்றி வர
உறவெலாம் வீடிருக்க-தங்க ரத்தினமே!
உழவரெலாம் தினை விதைக்கப்
பொன்னு ரத்தினமே!

சின்ன சின்னத் துளிரெடுத்து
வண்ண மலர் தான் மலர
வாசம் அது காற்றினிலே -தங்கரத்தினமே!
கலந்தே மயக்குதடி-பொன்னு ரத்தினமே!

வீட்டுக்கு ஒரு மரமே தெருவிலே
நட்டு வச்சே நாம் வளர்த்தா
நிழல் கொடுத்து காத்திடுமே-தங்கரத்தினமே!
கனி புசிக்கத் தந்திடுமே-பொன்னு ரத்தினமே!



கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# வந்துவிடு என்னுயிரே!

என் ஆயுள் முழுக்க
என் அன்பு மொத்தமும்
உனக்கே அம்மா.
அருகிலே இருந்து
அரவணைத்த நீ.
இன்று ஏனோ என்னை
விட்டு தூரம் சென்றாய்.
திரும்பி என்னருகிலே
வருவாய் என
நினைத்து நினைத்து
நாட்களும் நகர்கிறது.
தூக்கமும் தொலைத்து
துயரத்தில் தவிக்கிறேன்.
நீயின்றி தனிமையில்
வாடும் உன் பிள்ளையை
அணைக்க ஓடோடி வா.
ஏங்குகிறேன் மீண்டும்
உன் அன்பிற்கு.
உன் மடிசாய்ந்து
அழுது தீர்க்க வேண்டும்
அம்மா.
வந்துவிடு என்னுயிரே!



கவிஞர் அகல் தாமரை 'கவி',கமுதி

# காவியத் தாயின் இளைய மகன்

காவியத் தாயின்
இளைய மகன்
கண்ணதாசன் என்னும் கவிமகன்
காலத்தை வென்ற
கவியரசன்
கரைகாணா கவித்துவத்தின்
காதலன்
முத்தையாவெனும் பெயர் கொண்ட கவிமுத்து
மரபுக்குப் பேர்போன
கவிச்சொத்து
தமிழக அரசின்
ஆஸ்தான கவிஞன்
திரையிசைப் பாடலில்
முடிசூடா மன்னன்
போதையிலும் கவிபாடும்
மேதை
புகழுக்குப் பஞ்சமில்லாதது
உன் பாதை
கலங்காதிரு மனமே என்று
காலடி வைத்தாய்
கண்ணே கலைமானே பாடி
விண் சென்றாய்
வாழ்வியலை எளிதாக
வாயால் வடித்தாய்
விருதுகள் ஆயிரம்
வாங்கியே குவித்தாய்
மலை கூட ஒரு நாளில் தேனாகலாம்
"மணல் கூடச் சிலநாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவையாவும் நீயாகுமா?
கவியரசுன் கவிதைக்கு
ஈடாகுமா?"



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# இல்லை



இருப்பதெல்லாம் இருப்பதனால்
இருப்பதில்லை கொடுப்பதற்கு சில மனங்கள்
இறந்த பின்பும் இருந்துவிட்டால்
இறந்துவிடும் அவர் இரக்க குணங்கள்.

பூப்பதெல்லாம் காய்ப்பதில்லை
காய்ப்பதெல்லாம் கனிவதில்லை
சில காலம் இன்றி யாரும் இங்கே
சேர்த்து வைத்தும் நிலைப்பதில்லை.

இருக்கும் வரை இருக்க வேண்டும்
இறவாமல் இயற்கையிலே கொடுக்கும் மனம் - நாம்
இறந்த பின்பும் வாழ்ந்து இருக்க
இயன்றதெல்லாம் கொடுத்திடுவோம்
பிறர் துயர் துடைக்க.

கொடுத்த பின்பும் மகிழ வேண்டும்
கொடையுள்ளமதை கொண்டாடி புகழ வேண்டும்
நானென்றும் எனதென்றும் ஏன் எண்ணிக்கொண்டிருப்போம்
அறியாமையை இருளுடைத்து அனைத்துமிங்கே பொதுவில் வைப்போம்.

இனியும் மனம் இலகாது
இருக்கும் போதே இல்லை என்றால்
இருப்பதெல்லாம் இருப்பிடத்தில் இருந்ததற்கும் பொருளில்லை
நீ இருப்பதற்கும் அழகில்லை.

கவிஞர் ராஜா,சேத்தியாத்தோப்பு

# அக்கினி பாதையில் சாம்பலாகும் கனவுகள்!

சேர்த்து வைத்து கனவுகளே தீய்ந்துபோகுதே
தீவினைகள் எல்லாம் ஒன்றுகூடி கதைபேசுதே
நாளைகளை விதைப்பதற்கு இன்றைகளை விலைகொடுக்க
வேலைகிடைக்கும் என்றே நூலறுந்த பட்டங்களை சுமந்தே.

அலைகளின் சீற்றத்தில் கால்நடை இடறிவிழுந்த கணங்கள் எல்லாம்
கழண்டுபோய் இழுத்துக்கொண்டு போகிறதே
சுருள் அலைகளுக்குள்ளே ஓடிவரும் நாவனங்கள்
பாடிவரும் காவியங்கள் இன்னும் ஏனோ காதுகளில் மட்டுமே.

காலத்தின் வெள்ளத்தில் கடந்துபோன காவியக்காடுகள்
இதய அடுக்குகளில் ஆங்காங்கே அழகாய் அமர்ந்திருக்க
இன்னும் புரியமறுக்கிறது ஏனோ எஞ்சிய உயிர்காற்று
இன்னிசை சங்கீதமாய் ஒலித்துக்கொண்டிருக்க ஏக்கமாய்.

எதை தேடுகிறோம் என்று புரியாமல் இதயங்களை
அருந்தி பரிமாறிக்கொள்வதைவிட எதையோ தேடிக்கொண்டிருக்க
மனக்கண்கள் ஓடிஓடி எதையோ நாடிக்கொண்டிருக்கிறது
மோசமான நரகமா இடைப்பட்ட நாகரீகமா? எங்கே போகிறோம்



2

மறுநாள் விடியலுக்காக அடிவானம் தொட்டுப்பிடித்தே
அடுத்த உலகம் செல்ல எத்தனைமுறை போர்க்கோலம்
இப்போது அடிவாரம் வாசலில் எட்டிப்பார்க்கிறதே.
ஆன்மா தொடமுடியாமல் தவித்துக்கொண்டிருக்க.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# மலர்மகளே!

கையிலுள்ள கூடையில்
கணக்கில்லா பூக்கள் இருந்தாலும்,
கடைக்காரியின் கூந்தலில்
காண ஒரு பூ இல்லையே!
கைம்பெண்ணுக்கு தண்டனையா?
கலையான பூவுக்கு தண்டனையா?



பருவப் பெண்ணின் நாணமும் மொட்டாக,
மணப்பெண்ணின் மங்கள வாழ்வும்,
மலரின் பல வண்ணமாக,
தாய்மையின் அழகோ முதல் பூவின் வெளிப்பாடாக,
இல்லத்தரசியின் சேவகமோ முள் செடியாக,
அநேக பெண்மையின் வெளித்தோற்றமே!

ஏன் பறித்தும் பறிக்காமலும்,
முகர்ந்தும் முகராமலும்,
கசங்கியும் கசங்காமலும் வாழ்விழக்கிறாய்?
அநேக பெண்களின் கஷ்டத்திலும்
நீதான் நிகரான ராணியே!

மலரான ஊரே!
மலை அரசியின்
மலர் மகளே,
மலர்க்கூடாரமே!

காதல் ரோஜா!
ராஜாக்களும் பூஜாக்களை
தாஜா செய்யவே ரோஜா கொடுத்து,
மஜா செய்யவே பூஜாக்களுக்கு,
கூஜா தூக்கும் ராஜாக்களே!

தேர்தல் மலர்!?
கபட நடிகர்களின் பகட நாடகத்திற்கு,
பயன்படும் பல வண்ண ரோஜாக்கள்
தேர்தல் நேரத்திலே

மழலைமலர்!
ஜன்னலோர ரோஜாப்பூ,
குழந்தையின் வெட்கத்தின் கூடிய
முகத்திருப்பம் பேருந்தில்.

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# அங்கலாய்ப்பு

இனியொரு விதிசெய்வோம்
பாட்டுடைத் தலைவன் கூற்று
இருக்கும் விதிகளை மதியோம்
இந்த காலத்திற்கான கூற்று
சாலைவிதிகளை மதியோம்
ஒருவழிப்பாதையில்
ஒய்யாரமாக வலம்வருவதும்
வரிசையில் செல்ல யாருக்கும்
வழக்கமோ பொறுமையோயில்லை
முந்தி செல்வதிலேயே எப்போதும்
முயற்சிப்பதனாலே சாவதிலும்
முந்தியே செல்கின்றனர்
தலைக்கவசம் உயிர்கவசம்
ஆனால் பால்பொட்டலமும்
காய்கறி பழம் தாங்கும் கூடையாகியதே
அபராதம் அபராதம் என
அலறுவதினாலேக்
காவலர் கண்முன் மட்டுமே
மற்ற நேரங்களிலோ
மோட்டார் வாகனத்தின்
முன்பு மட்டுமே இருக்க
தலைக்கவசமின்றி சென்றவன்
தலையே இல்லாமல் சாகிறான்.
அந்நிய நாட்டைப் பார்த்து
அங்கலாய்க்கும் நாம்
அங்கு கடைபிடிக்கும் நல்லதை
அலட்சியப்படுத்துவதுமேனோ?






கவிஞர் ஷீலாதேவி அருணாசலம்,நாகர்கோவில்

# ஹைக்கூ

1
பலத்த காற்றில்
அமைதியாக உறங்கியது
இரவு பொழுதோடு வானம்.

2
கல் எறிந்தவனுக்கு
பசியாற்றியது
விழுந்த மாங்காய்.

3
சுதந்திரமாக நீந்துகின்றன
கடல் மீன்கள்
எல்லைக் கோடில்லை.

4
பக்கத்து தோட்டம்
விழுந்து விட்டது
மரத்தின் நிழல்.

5
கல்லை பார்த்தவுடன்
திடீரென பிரிந்து சென்றுவிட்டது
கிளை தார்ச்சாலை.



கவிஞர் அ. செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# எம் சுவாசத்தின் பொற்சுடரே

அருந்தமிழே! ஆருயிரே!
அன்னை மொழியே! என்னுயிர் ஆணிவேரே!
நீளும் நெடுந்தொடரே! நீங்காத பொற்சுடரே!
பேசும் கீற்றே! ஆனந்த ஊற்றே!
உனை கற்க உயிர் துடிக்குதே!
உனை படிக்க இன்பம் பயக்குதே!
எம்மை தாலாட்டும் அன்னை மடி நீயே!
எம்மை சீராட்டும் வெண்பனியும் நீயே!
காலத்தால் அழியாத தங்கப்பரிசாய்!
ஒவ்வொரு நாளும்
என் கண்களுக்கு தெரிகிறாய் நீயும் புதிதாய்!
நாளும் உனை நினைத்தே.
என் பொழுதுகள் கழிகிறதே.
உனை நினைத்தாலே போதும்.
என் உடலும் சிலிர்க்கிறதே.
நீ இல்லாத இடமுண்டோ.
உமை பற்றி பேசாத உயிருண்டோ.
சுவாசமே! உனை நித்திரையில் நினைத்தால் கூட.
தென்றலும் வீசுமே.





கவிஞர் ரதிப்பிரியா ராஜசேகர்,இடைப்பாடி

# சீமைக்கு போன என் சீமானே

உன் நெனப்பிலே நான் இருந்தேன் மாமா
ஆடி போயி ஆவணியிலே
வருவாகேயென சொன்னாகே
பாவி மனம் தவியாய் தவிக்குதுகே
ஊரு ஜனம் எல்லாம் கேட்க
பதில் சொல்ல முடியாதுகே

கடல் கடந்து சென்றாலும்
என் நெனப்பு எல்லாம் உன்னோடு தான் புள்ள
மல்லிகை பூவை பார்க்கையிலே நெனைக்குது புள்ள
வயலோர வரப்பிலே
தெம்மாங்கு பாட்டு பாடி அசத்தினேன் புள்ள
சீமைக்கு சென்றாலும்
ஞாபகங்கள் அலை மோதுது புள்ள



வயிற்று பிழைப்புக்காக
தாலி கட்டியவளை
விட்டு போகையிலே

நெஞ்சம் தவியாய் தவிக்குது புள்ள
ராக்காயி மரிக்கொழுந்து வாசம் வீச
உன் அழகிலே சொக்கி போனேனடி
உன் வருகைக்காக காத்திருந்து கண்கள்
கண்ணீரில் நனைகிறது மாமா ஓடோடி

வந்து சேருகையிலே தென்னந் தோப்பும் உன்னை தேடுதே
அந்தி வேளையில் இருவரும் ஜோடி சேருவோமே மாமா
உன்னை நினைத்து கண்ணும் கிறங்குதே

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# காயம் பொறுத்திரு

உனக்கென்று ஒரு பாதையை உருவாக்கும் பொழுது
பல தடைகள் தோல்விகள் ஏளனங்கள் காயங்கள் என உருவாகும்.

உன் கனவுகள் மெல்ல மறையும் பாதையில்
தடுமாற்றங்கள் மேடு பள்ளங்கள் தோன்றும்.

வெற்றி என்பது ஒருவருக்கு மட்டும் சொந்தமல்ல
முயன்றால் வெற்றி உனக்கும் சொந்தமே.

காயங்கள் கண்டாலும் பொறுத்திரு
உன் இலக்கை நோக்கி முயற்சி செய்
பயிற்சி செய்.

தோல்வி கண்டாலும் தவறில்லை
தோல்வியே உன் முதல் படி.

மனதில் உறுதி கொண்டு உன் லட்சிய
பாதையை நோக்கி முன்னேறு.

தடைகள் வந்தாலும் தகர்த்தெறி
உன் வாழ்க்கை உன் கையில்.

வாய்ப்பு என்பது அமையாது
உனக்கான வாய்ப்பை அமைத்துக் கொள்.
சரியாக பயன்படுத்து வெற்றி அடைவாய்.

துணிந்து நில் பயம் கொள்ளாதே
காற்றை ஏணியாக்கு மேகத்தை படிகளாக்கு.
நீலவானம் உன் கையில்.

உன் தன்னம்பிக்கை ஒன்றே உன் பலம்
நாளும் போராடு வெற்றி என்றுமே உன்னோடு.



கவிஞர் ர.ரமேஷ்,திருப்பூர்

# பூவின் போர்க்களம்

பேருந்தின்
கூட்டநெரிசலில்
நசுங்கி வலியால்
நெளியும் தேகத்தில்

வரைமுறையின்றி மேய்ந்து
திருகுமாணியின்றி
அங்கங்களை அளவீடு செய்யும்
கறுப்பாடுகளின் கொண்டாட்டத்தை
அறிந்த சேலையொன்று

வேகத்தடையில் ஏறி
இறங்கிய ஊர்தியின்
அதிர்வில் நழுவும் ஆடையை
சரிசெய்ய முனைந்திடும்
விரல்களையும் மீறி
அகப்படும் அங்கத்தை
அசையாமல் அசைபோடும்
அசைவ ஆட்டின்
கண்ணில் தூவ

கைப் பைக்குள்ளிருந்த
மிளகாய் பொடி பொட்டலத்தை
அமைதியாக உருவி எச்சரிக்கும்
சராசரிப் பெண்ணின்
தினசரி அனுபவங்களில்
இதுவுமொன்றாய்
தனது தைரியமாக
நிரூபிக்க.

அத்துமீறிய கண்களுக்கு
அடுத்த நிறுத்தமே
கடைசி நிறுத்தமானது.



கவிஞர் கோவை ஆனந்தன்,குமாரபாளையம்

# புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்

சாரல்மழை தன்னில் சமமாய் நனைகின்ற
கூரல் போலங்கு குவிந்த காதலில்
ஈரம் படர்ந்திட இருக்குமோ மனததும்
பாரென் தலைவியே பரிகாசம் செய்குவேன்.

ஆரல் வாயினை அழகாய் பெற்றவளுன்
தீரா காதலோ திரும்பவும் வைத்திடும்
வருவான் காதலன் வருத்துவேன் அவனையும்
தருவேன் ஏக்கமும் தன்துயர் அறியவே

என்றே பகன்றநீ ஏதும் செய்யிலை
நன்றாய் கூடியே நாணமும் விடுத்தனை
இன்று நாணத்தில் ஏனிந்த நிலையுமே
சொன்னால் தீருவேன் சுந்தரியுன் ஆற்றுமை

என்தாய் தோழிநீ என்நிலை அறிந்திடு
தன்பால் சொன்னது தளர்த்தியும் கூடினேன்
என்னே என்நிலை இங்ஙனம் ஆயின
பொன்னாய் ஆயினள் போயினேன் தகரமாய்

பிணக்கால் அவனையும் பிரிந்தே வருத்திட
இணக்கம் காட்டிலேன் என்றுநான் சொன்னது
மணக்கும் மலரினை மறைத்தல் போலது
கணத்தில் வெளிவரக் கண்டதும் ஈர்த்தது.



என்னே இக்காதலும் என்னையும் வீழ்த்திட
முன்னே அவனுடன் முப்பொழுதும் கூடினள்
பின்னே எங்ஙனம் பிணக்கும் காட்டுவேன்
சொன்னேன் சினத்தில் சோர்ந்தேன் அவனிலே.

கவிஞர் சௌ.நாகநாதன்,சின்ன இரெட்டையூரணி

# ஏரமென்ன முடிதாய்

மூழ்கடித்த நீருக்குள்
மீன்
சிரித்தபடிதான்
நீந்திச் செல்கிறது.
சூரியனை
பிடிக்க சென்ற
பீனிக்சின் இறகெல்லாம்
வெற்றியின் வேகங்கள்.
ஒரு கல் எரிந்து
கலைத்துவிடும் மீனுக்குள்
சினைப்பையுடன்
விரைகிறது ஒரு மீன்
கல் சற்று கனம்தான்
விழும் வேகத்திலும்
எரிபவன் கோவத்திலும்.



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# இராவணனால் வீழட்டும்

மலராத மொட்டுகளை
வண்டுகளும் நுகர்வதில்லை
வளராத வண்ண மீன்களை
நாரைகளும் உண்ணுவதில்லை
கலியில் மனிதன் மட்டுமே
கற்பினை களங்கம்
செய்து மலடனாகிறான்
கரு மேகங்களின் காரிருளை கிழிக்க
கதிரவன் கண்ணீர் சிந்துவதில்லை
சுட்டெரிக்கும் சூரியன் நீ
தழல் நெருப்பினை
தலை சுட்டியாய் அணிந்து வா
பிறை நிலவே விழுந்து
சரிந்தாலும் நீ வெண்மை தீயடி
வண்ணங்கள் பரப்பும் வானவில்லென
நீ வளைந்தது போதும்
வளைவில் அம்பைத்
துளிர்க்கும் அம்பையாய் வா
உடைந்த கண்ணாடி துண்டுகள் உரசி
உதிரம் உதிர்வது இயற்கை தானே
படிந்த இரத்தக் கறையை
பயமின்றி ஏந்தி வா
அவமானம் என்று நீ
நினைப்பதை அவமதித்து
சூலம் ஏந்திய சூர்ப்பனகையாய் வா
இராமன் வேடம் தரித்தவர்கள்
இராவணனால் வீழட்டும்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ,விருதுநகர்

# வெளிச்சங்கள்

அலையின் இடைநில்லா முயற்சியும்
சிலந்தி வலையின் சீர்மிகு பயிற்சியும்
வீழ்ச்சி அடைந்து வேதனையில் வீழ்வதில்லை
முயற்சிகள் கூட்டும் பயிற்சியில் முழுமையடைந்தால்
இகழ்ச்சியும் இழப்பும் வலிதருவதில்லை.
விழுந்தவனின் வரலாற்றைவிட
விழுந்து எழுந்தவனின் முயற்சியில்
கிடைக்குமென பாதைகள் முளைப்பதுண்டு.
வலிகள் தாங்காமல் வாழ்வில் வெற்றியில்லை
பிழைகள் திருத்தாமல் பிள்ளைகள் கற்பதில்லை.
ஒற்றை நொடியில் மாறும் தருணங்களில்
உயிர்ப்பிக்கும் வாழ்வில்
இழப்பை எண்ணி இடிந்துவிடாமல்
இமயத்தை எட்ட சிந்தனைகள் வளர்ப்போம்.
வீழ்ச்சி கண்டு வீழாத
துணிச்சலும் நம்பிக்கையும்
விழிகளெனக் கொண்டால் செல்லும்
பாதையெங்கும் சிகரத்தின் வெளிச்சங்களே.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# நிற்காத காலம்

நிற்காத காலம் தான்
என் கனவுகளை மதிக்காத
காலம் தான்!
முயற்சி செய்தும் தோல்வியை
தந்த காலம் தான்!
கற்பனைகளை கலைத்த காலம் தான்!
நினைவுகளைக் மட்டும்
பரிசளித்த காலம் தான்!
ஏதும் உனக்கு இல்லை என்று
ஏமாற்றம் தந்த காலம் தான்!
பொய்யான மாயங்களை
உணர்த்திய காலம் தான்!
உதட்ரோர புன்கையை
பொய்யாக்கிய காலம் தான்!
ஆறாத காயங்களை ஊற்றாக
தந்த காலம் தான்!
கடந்த காலம் என்று கடந்து
வந்த காலம் தான்!
இதுவும் கடந்து போகும் என
இருக்கும் நிகழ் காலம் தான்!
எதிர்ப்பார்ப்பு இல்லாத
எதிர்காலம் தான்!
காலங்கள் என்று ஓடிக் கொண்டே
இருக்க!
நான் மட்டும்
எங்கோ தொலைந்து போன மர்மகாலமோ!



கவிஞர் சாரா ஜகன்,சென்னை

# மறையாத காதல்

மறையாத காதல்
நினைவுகள்
மீண்டும் மீண்டும்
துயரத்தில்
ஒரு நாள் ஒரு கணம்
உன் மடியின் ஓரம்
அன்றும் இன்றும்
உறக்கமில்லா நிபந்தனையில்
அவளும் நானும்
காதல் என்னும் பள்ளி அறையில்
கற்றுக் கொண்டிருக்கிறோம்
காதல் கற்றலை
பின்னாளில்
காதல் என்னும் பிரிவில்
மன அறிவும்
உண்மையில்லா கேள்வியில்
நினைவுகளாகவே
மறுக்க முடியாத
மரணத்திற்கு ஈடாக
மரணித்தும் தொடருமே!

உண்மை காதல்.



கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# காலம் அறிதல்

அதிகாரம் : 49




பகலில் காத்திருந்து
கூகைவீழ்த்தும் காக்கைபோல்.
பகைவீழ்த்தக் கருதும்வேந்தர்
காலம்வரக் காத்திருத்தல்நலம்.

காலமறிந்து பொருந்தநடத்தலே
கரைந்தோடும் செல்வமதை.
நீங்காது நிலைத்திருக்கக்
கட்டிடும் பிணைக்கயிறாம்.

தேவையாம் ஆயுதமும்
தகுதியான காலமுமறிந்து.
ஆக்கமதை மேற்கொள்ள
அரிதானதென்று ஏதுமுளவோ?

தக்ககாலம் ஆய்ந்தறிந்து
தடம்புரளா இடமுந்தேர்ந்து.
புத்தாக்கம் மேற்கொள்ள
பூமிகூட கைவந்தேறும்.

தரணியெலாம் வாகைசூட
விரும்பிடும் மாந்தர்.
தக்ககாலம் கைகூடும்வரை
தற்பொறுமை கொண்டிருப்பர்.

நெஞ்சுரம் கொண்டோன்
போருக்கு அடங்குதல்.
பகைதாக்கப் பம்மும்
ஆட்டுக்கடா போலொத்தது.

பகையோர் பழிதீர்க்க
பகுமானக் காலத்திற்காய்.
பொறுத்திருந்து வீழ்த்தும்வரை
சினங்காப்பர் அறிவுடையோர்.

பகைகாணும் பகைஞரை
பொங்கிடாது பொறுத்திடின்.
சாதகக்காலத்தில் முடிவுவந்து
தலைகீழ்மாய்வர் பகைஞர்.

அரிதான தக்கசமயம்
தானேவந்து வாய்க்குங்கால்.
அரியவகை ஆக்கச்செயலை
அப்போதே செய்திடல்நலம்.

கொக்கு பொறுத்திருந்து
மீன்கொத்தி உண்ணுமாப்போல்.
தக்ககாலம் வாய்க்கும்வரை
தற்பொறுமை கொளல்நலம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# தென்னை

தென்னவனுக்கு தேன் தோற்கும் தென்னங்கள்.
மன்னவனுக்கு மதிமயக்கும் கன்னிக்குரும்பைகள்.
பாங்காய் புசிக்கத் தருவாள் தென்னை.
தேங்காய் ருசிக்கச் செய்வாள் தன்னை.
மன்னன் ருசியாற்றும் செவ்விளநீராகும்
உன்னியவன் பசி ஆற்றும் உளநீராகும்



கவிஞர் மதீரா (அறிவிப்பாளினி),இலங்கை

# சொல்லிய சொல்லொரு சொல்லாகுமா?

பெண்ணாசையில் விளைந்தகாப்பியமாம் இராமகாதையில் அயோத்தி
மண்ணை ஆண்ட தயரதனின் தலைமகன்
சீத்தாராமன் புகழ்பெற்றது இனத்திலா வனத்திலாவென்ற
சிந்தனை எழுந்ததால் எழுந்த கவிதையிது!

யானறிந்த இளைஞர் ஒருவர் ஒருநாள்
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"என்ற
சிந்தனை தன்னிலிருந்து விலகி சிறியன
சிந்தித்துரைத்தார் ஒருகொடுஞ்சொல் சுற்றியிருந்தோர் கேட்கவது
"வனத்தில் அலைந்தோம்; இனத்தில் அடங்கினோம்"
என்பதாமதனை எண்ணி எண்ணி வருந்தவேசெய்கிறேன்!

சிறியன சிந்தியாதான் வருங்காப்பியந் தன்னைச்
சிந்தித்து நாளுமோதும் நற்றமிழ் நாவலரவர்;
கம்பனை சுவாசிக்கும் இயல்பினர், கம்பன்காதலர்;
கம்பன் கழகக்கூட்டம் அருகாமை நகரங்களில்
நடந்தாலும் மறவாது தன்குடும்ப பிள்ளைகளையும்
உடனழைத்துச் செல்லும் பண்பாளரவர் ஏனந்த
நடையில் நின்றுயர் நாயகன்வழி நடவாது
நாவினைத் தவறாய்ச் சுழற்றிசொன்னா ரந்தசொற்றொடரை?

படித்தனரவரது குழந்தைகள் வேறொருசமூகம் சாரெமதுபள்ளியில்;
பத்துவரை படித்தவந்த குழந்தைகள் பதினோராம்
வகுப்புபயின்றிட அவர்கள் சமூகப்பள்ளியில் சேர்ந்ததையே,
" வனத்தில் அலைந்தோம்; இனத்தில் அடைந்தோம் "
என்றுரைத்தா ரவரது தவறெனப் பட்டதடியேனுக்கு!

வனம்சென்றராமன் குகன்சுக்கிரீவன் வீடணனையும் உடன்பிற
வாஞ்சையுடன் சேர்த்துத்தாம் எழுவரெனச் சொன்ன
சகோதர காப்பியம் காட்டியபாதையில் செல்லாது
சகோதர காப்பியத்தை எடுத்துப்பேசுவ திலென்னசிறப்பு!
"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"வென்ற வள்ளுவம்
சொன்னவழி வாழ்ந்து காட்டுவதில்தான் உள்ளதுசிறப்பு!



குறள் 195:
சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# போதை வாலிபா!

புத்தகம் தூக்கி பாடம் படிக்க
சென்று புத்தி இழந்து
உலகை மறந்து
உணர்வை இழந்து
கெட்டு சீரழிந்து
உன்னையே அழித்துக் கொண்டாயே!

சொற்ப நேர தேன் சொட்டும்
அகிலம் மிதந்திட
உன் வாழ்க்கை இலட்சியத்தை
புதைத்து புதை குழிக்குள்
நீயே கொன்று சாம்பலாக்கி விட்டாயே!

வையகத்தை ஆள வந்த நீ
தினம் வைத்தியரை நாடி ஓடியே
உன் எதிர்காலம் காணாமல்
கனவிலே சிதைந்து போக வைத்தாயே!

எட்டு திசைக்கும் உன் புகழ்
பரவ தன்னையே செதுக்கி சிற்பமாக
மாற வேண்டிய நீ சிறையில்
கைதியாக மானத்தை இழந்து நின்றாயே!

இதுதான் போதை உனக்கு கொடுத்த
மிகவும் அருமையான சிறந்த தீராத
பெறுமதியான வைர
வெகுமானமோ சொல்
என் எதிர் காலத்து தலைவனே?



கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# போர் தந்த வலிகள்

வலிகள் பேசும் உதடுகள்!
ஓலங்கள் கேட்கும் செவிகள்!
களமெங்கும் சிதைந்த உடல்கள்!
முள்வேலியில் முடங்கிய நிலம்!
உடைந்த பானை நொறுங்கிய வீடு!
பெற்றோரை இழந்த சிறார்கள்!
பிள்ளை இழந்த குடும்பங்கள்!
கனவை மறந்த காளையர்!
அடையாளம் தொலைத்த ஆன்றோர்!
எல்லை கடந்து மொழி தெரியா
நிலத்தில் ஏதலியாக தமிழன்!

நிலையற்ற உலகில் தேவையற்ற
வெறுப்பினால் நிலை மாறின
போன வாழ்வு!
போர் இல்லா புதிய உலகை
உருவாக்குவோம்!



கவிஞர் செ.தமிழ்நேயன்

# நேரம்

இறுக்கத்தில் முறியும்
தளர்வில் உதிரும்
முடிச்சுக்களின்
பயணம்
நூல்களின்
சரியான
இடைவெளியில்
தொக்கி நிற்கின்றன
எனவே தான்
நேரங்கள்
கட்டப்படுகின்றன
தொடுக்கப்படும்
பூக்களை விட
சற்று கவனமாக



கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# இரகசியம்

இப்புவியில்
இரகசியம் இல்லாத
உயிர்கள் உண்டோ

முதல் முதலாய் கொண்ட
ஒருதலைக் காதல்
ஒரு இரகசியம்


முதல் முதலாய் செய்த
தவறை மறைத்தது
ஒரு இரகசியம்

பிறரின் நன்மைக்காக
ஒரு உண்மையை
நம்முள் மறைப்பது
ஒரு இரகசியம்

ஆழமான அன்பு கொண்டு
அதை ஆழ்மனதில் மறைப்பது
ஒரு இரகசியம்

நம் இரகசிய அறையின் காவலன்
நம் இதயம் என்று நினைத்தால்

உணர்ச்சிகளின் பிடியில்
நம் இதயம் ரகசியத்தை உடைக்க
எண்ணும் என்பதே உண்மை



நம் மூளையே நம் ரகசிய அறையின்
காவலன் என்பதே பெரும் இரகசியம்

இந்த ரகசியத்தை அறிந்தவர்கள்
நம்மில் எத்தனை பேர்.

கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# பொழுது விடியுமா புது வாழ்வு மலருமா

பொழுது விடியுமா புது வாழ்வு மலருமா
அஞ்சு பைசா பத்து பைசா குருவி சேர்த்தாப்புல சேர்த்து வெச்சு

சோறு தண்ணி திங்காம நல்லபடியா
தூங்காம கெடைக்கிற வேலைக்குப் போய்
கடனை உடன வாங்கி நெலமொன்னு வாங்கிப் போட்டேன்!

தரிசு நெலத்தைத் தான்
என் தலையில கட்டிட்டாங்களே நான் என்ன செய்ய?
ஆனது ஆகட்டுமுன்னு ஓடி ஓடி பண்டுதம் பார்த்து
இயற்கை உரத்தைப் போட்டு

மண்ணை பக்குவத்துக்குக் கொண்டாந்து நிக்கையில
தண்ணி இல்லைனு பஞ்சாயத்தாக!
தண்ணிக்காக ஏறி எறங்காத எடமில்லை

அணையைத் தொறக்கச் சொல்லி மனுவுந்தான் கொடுத்திட்டோம்
யாரும் எதுவுந்தான் செய்யலையே
எங்க மனசும் இப்போ வெந்த மனசா ஆகிப் போச்சே!

எஞ் சாமி வருண பகவான் மனசு வெச்சு மாரி மழை பெஞ்சுதுன்னா
இருக்குற கிணறும் நெறஞ்சிரும்
வெள்ளாமையும் போட்டு எடுத்துடுவேன்!

என்ன பண்ணனு தெரியாம பசிக் கொடுமை தாங்காம
யாருகிட்டயும் கேட்டு வாங்கவும் வெட்கப் பட்டு
ஈரத் துணியை வயித்துல போட்டுக்கிறோம்
நானும் எம் பொஞ்சாதியும்!



நான் மட்டும் இல்லீங்க என்னைப் போல
நெறய விவசாயிக நெலமையும் இதுதானுங்க!
எங்களுக்கும் தான் பொழுதுந் தான் விடிஞ்சிடுமா
அது நடந்திடும் நாளுந்தான் வந்திடுமானு

ஒவ்வொரு நாளும் நெனச்சுக்கிட்டே
தூங்கி எந்திரிச்சு எங்க வாழ்க்கையும் போகுதுங்க!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# பெண் தெய்வங்கள்



கருவறை ,தெய்வமாகவும் நடமாடும்
தெய்வமாகவும், நாம் தினம் பார்க்கும்
பெண் தெய்வம் நம் தாய் தானே!
கோயிலின் கர்ப்ப கிரகமும் நம் தாயின்
கருவறையும் ஒன்றே தானே!
நாட்டுக்காக பாடுபட்ட பெண்களில் பலர் உண்டென்றால்,
வேலு நாச்சியார், ராணி மங்கம்மாள்
ஜான்சி ராணி போன்ற மகத்தான
பெண் அரசிகள், இவர்கள் மங்கையர் திலகங்கள்,
தியாக செம்மல்கள்.
நாட்டு மக்களின் நலன் ஒன்றே
குறிக்கோளாக வாழ்ந்தும், அன்னியரை
விரட்டியும் சரித்திரம் படைத்தும் இன்றும்
வாடா மலர்களாக மணம் வீசி
கொண்டிருக்கிறார்கள். என்றால், அவர்களின்
தியாகத்தையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும்
இன்றும் உள்ளார்ந்து ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.
அக்கால பெண்ணரசிகள் வீரத்துடன் போரிட்டும்
குழந்தையை முதுகில் கட்டிக் கொண்டும்
இரண்டு கைகளிலும் வாளேந்தியும் போரிட்டு
வீர மரணம் அடைந்திருக்கிறார்கள்.
தன் கணவனுக்காக மதுரையை எரித்தாள் கற்புக்கரசி கண்ணகி.
மக்களின் பசிப்பிணி தீர அள்ள, அள்ள
குறையாத அக்ஷய பாத்திரத்தை பெற்று வாழ்ந்தாள் மணிமேகலை.
இப் பூமியில் பிறந்த மீனாட்சியும்
ஆண்டாளும் தீராத பக்தியால் பகவானையே
மணாளனாக அடைந்தார்கள்.
இக்கால பெண்கள் எங்களால் முடியாதது ஏதுமில்லை
என்பது போல், எவரெஸ்ட் சிகரம் ஏறியும் ,விண்வெளி பயணத்திலும்
வெற்றிக் கண்டு வருகிறார்களே!
நம் பாரதி " மாதராய் பிறப்பதற்கு
மாதவம் புரிந்திட வேண்டும்" என்றார்.
புதிய, புதிய வரலாறுகளை
படைத்துக் கொண்டே வருகிறாளே!
எங்கேயும், எப்போதும் பெண் ஒரு மகா சக்தியே!

கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# பாரதி பிச்சமூர்த்தி பாவே எழுதிக் கிழித்து எரித்த கவிதைகள்

எட்டைய புரத்தாராம்! மீசையர்! முண்டாசு
சீர்கவிஞர்! தன்றனுக்கு நிரைவுதராக் கவிதைதனை
கிழித்தெறிவார் என்றுரைத்தார் யதுகிரிப்பேர் அம்மையே!
எழுதுபவர் வாய்தனக்கு வழங்கவேண்டும்! தெருப்போகும்
பாமரனும் சுவைத்திடவே தக்கதுவாய் அமையவேண்டும்!
இல்லையெனில் பாழெனவே கிழித்தெறிவர் அன்னவரே!
தஞ்சாவூர் மாவட்டச் சாலியமங் கலத்திருந்தார்
பிச்சமூர்த்தி! நீள்வெண்ணிறத் தாடியினார்! வெற்றுடம்பர்!
ஒட்டியதாம் வயிற்றினரே! உக்கிரமாம் செந்நிறத்துக்
கண்ணினரே! செவ்வண்ணம் கொண்டவரே! தாமெழுதித்
தாம்சுவைத்து அழித்திடுவார்! சுற்றுமுற்றும் ஏதனையும்
தானறியார்! கற்பனையாம் கவிதைவெளி தான்சூழல்!
வானத்து மேகங்களில் எண்ணற்ற வடிவங்கள்!
மாறிமாறி புதியதுவாய் பற்பலவாம் உருவங்கள்
தோன்றுவதைக் கண்டுவப்போம்! நாமதனை பின்தொடர்வோம்!
என்கவிதை எனக்குத்தான் எவர்க்கும்நான் எழுதவில்லை!
மற்றவரின் பாராட்டு வேண்டாவே! பாவேயிடம்
இப்பண்பு அமைந்ததுவே! தானெழுதும் கவிதன்னில்
நிறைவெய்தும் காலம்வரை திருத்துவதும் கசக்கியெறிதல்
அன்னவரின் தன்மையே! மனநிறைவு கண்டிட்டால்
சுவைத்தவுடன் பொசுக்கிடுவார்! பிறந்தபய னடைந்ததுவே!
அனுபவித்தேன்! மகிழ்ந்திட்டேன்! வேறென்ன வேணுமிங்கு?
தாயிச்சை கொண்டனளே! சுவைத்தவளும் பாராட்டினள்!
வாங்கியதை தழலதனில் சாம்பலாக்கினார்! மற்றவர்க்காய்
தொகுப்பாக்க விரும்பவில்லை! பிச்சமூர்த்தி
பாவேயும் பாரதியும் ஒன்றினரே! ஒருசிலவை
நமக்குண்டே! இல்லாதவை கொண்டுள்ளோம்! தொகுக்கின்றோம்!
எண்ணற்ற கவிஞர்கள் பாரெங்கும் பரவியுளர்!
நச்சியவை நாம்கொள்வோம்! ஏற்பிலதேல் தள்ளுவமே!
ஆய்வதற்கு மூவரேற்றோம்! முடிவெடுத்தல் நாமாவோம்!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# தீராத கனவுகள்

தீராததே தீராததே
தினந்தோறுமே
தேடல் மனமே

கனவிலும் நினைவிலும்
கவிதையும் வரிகளும்
கலங்களகாய் சிறு பிணக்குமே
ஓரத்தில் மின்னிடுமே

போவென்று சொல்கிறதே
வாவென்று அழைக்கிறதே
சிறுபிள்ளை சிணுங்கலை போல்
சிவந்திடும் முகவடிவம்

உன்னருகில் நானிருந்தால்
என்னுருவம் மறந்திடுதே
என்னிலே நீ கரைய
நெஞ்சமே நீரலையாய்
குளுமையில் கலந்தோடும்

வடிவங்கள் சூட்டாத
வண்ணவண்ண மயக்கத்திலே
மனமும் சதிராடி சத்தம் போடுதே

தீர்ந்திடுமோ நின்காதல்
மொழிசுவையும்
தீராததே தீராததே



கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# வழுநிலை

யாரோ இருவர் ஒருவராகி
யாவிலும் ஒருமையாகி
யாதொரு செயலும்
வழுநிலை பொருந்தி
யாக்கை யிங்கு பொருளின்றி
வெறும் பூதமாகி நிற்குது!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# கூண்டுக்கிளி

பசுமை பொங்கும் நிறத்திலே
சிவப்பு வண்ணம் அலகிலே
கொஞ்சும் மொழி பேசிடும்
மனம் கவர்ந்த பச்சைக்கிளியே.

சின்ன கண்ணை உருட்டியே
தலையை சாய்த்து ஆட்டியே
பறந்து செல்ல நினைக்கும்
அழகு வண்ணக்கிளியே.

கோவைபழம் , கொய்யாப்பழம்
கொரித்து தின்னும் அழகியே
மெல்ல மெல்ல நடந்து வந்து
தங்க நிற சீட்டெடுக்கும் கிளியே.

நீ சிறகை விரித்து பறந்திடாமல்
கூண்டில் அடைத்து வைத்தது யாரம்மா
கொஞ்சிக்கொண்டே எனக்கும்
அதை நீயும் சொல்லம்மா.

கூண்டை கொஞ்சம்
திறந்து விடுவேன் நானம்மா
விருப்பத்துடன்
பறந்து செல்வாய் நீயம்மா.

நீ சுதந்திரமாய் பறக்கும்
அழகை ரசித்து கொண்டே
இருப்பேன் நானம்மா
உன்னை போல நானும் தான்
கூண்டு இல்லா ஒரு கிளியம்மா.



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# காலத்தினாற் செய்த உதவி!

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிதென்றார் வள்ளுவரும்!
கோடிகோடியாய் பணமிருந்தும் வறுமையில் வாடுவோர்க்கு
கொடுப்பதற்கு மனமின்றி இருப்பவர்கள் பலருண்டு!
ஈட்டிடும் வருவாய் சிறிதெனினும் அதிலொருபங்கை
ஈத்துவக்கும் மனமுடையோர் இருப்பதினால் இவ்வுலகில்
வான்மழையும் வளம்காக்க பொழிகிறதே மண்மீது!
பேருந்தில் முதியோர்கள் இருக்கையின்றி நிற்கையிலே
இளைஞர்கள் எழுந்து இடமளித்தல் பேருதவி!
உடற்குறை பாடுகளால் உழைத்திட வழியின்றி
இரந்து பிழைப்போர்க்கு இயன்றவரை உதவிடலாம்!
நடைபாதையே வீடென்று படுத்திருப்போர் தமக்கு
நடுங்கும் குளிர்போக்க உடை,போர்வை அளித்திடலாம்!
தாய்,தந்தை இழந்து தவிக்கின்ற சிறுவர்க்கு
நேயமுடன் உதவிக் கரம்நீட்டி உதவிடலாம்!
ஏட்டுக்கல்வி எட்டாக் கனியென நம்நாட்டில்
படிக்க வழியின்றி தவிக்கின்றார் ஏழ்மையிலே!
கொடுக்கும் மனமுடையோர் ஏற்றிடலாம் செலவுகளை!
படிப்பறி வில்லாதோர்க்கு படிவங்கள் நிரப்புவதும்
நடுவழியில் வாகனகள் பழுதாகித் தவிப்போர்க்கும்
உதவிடும் தருணங்கள் பெருமிதம் தந்திடுமே!
முகமறியா மனிதர்களும் உதவிய முகங்களை
அகத்தினில் சுமந்து மகிழ்ந்திருபர் எந்நாளும்!
பிறர்க்குதவி செய்து பெருமகிழ்வு காண்போர்க்கு
பிறிதோர் வடிவில் பயன்வந்து சேர்ந்திடுமே!
மனதார செய்கின்ற உதவி சிறிதெனினும்
இணையில்லை அதற்கெதுவும் இப்புவி மீதினிலே!
மனிதநேயம் மலர்ந்திடும் மகத்தான தருணங்கள்
மனதிற்கு இதமளிக்கும்! மனநிறைவு மிகுந்திருக்கும்!
பிறப்பின் பயனே பிறக்குதவல் என்றுணர்வோம்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# மச்சம் தந்த முத்தம்

இன்னதென பொருளுணர்த்தி,
இன்னலெது வென இடுக்கண் களைந்து
இடக்கை வளைத்து அணைத்த துன் மார்பு

கட்டியணைத்தில் காற்றில் பறந்த மனம்
காலைப் பொழுதின் கீதம் ரசித்தது

உன் உள்ளங்கை மச்சமென
சிறு மழைத்துளி நானென.
மச்சம் தந்த முத்தம் மிச்சமின்றி
வாழ்க்கைப் பேசி வாழத் துடிக்கும்

ஒத்த சிந்தனை நமக்குள்
ஒதுக்கிவிட இயலாது
ஒன்றிப் போகையில்
வேறென்ன செய்வது

மேகம் மிதக்க மெலிதான ஒரு
முத்தம் தந்துவிடு போதும்

பூக்கள் நிறைந்த சாலை
பூவே என் நெஞ்சுக் கூட்டில்
நீ.

வழிகேட்கும் கடந்துபோகும்
காலைத் தென்றலும்

வாழ்தல் இனிது வாழ்தலின்
பொருள் உணர்கையில்
உன் மூச்சுக்காற்றை ஆழ்ந்து கவனி
நானும் நீயும் சம அளவில்
உயிர் வாழலாம்!



கவிஞர் ஆர்.மோகன்ராஜ்

# கால அவகாசம்

உன் சிறு அசைவுகளையும் அறிய
என் மனம் ஏங்குகிறது.
நீயோ இதெல்லாம் ஒரு விசயமா என்கிறாய்.
அந்த நொடி நீ என்னை விட்டு
விலகிச் செல்வதாகவே என் மனம் நினைக்கிறது.
நீ எனக்கு மட்டுமே சொந்தம் என்று எண்ணி இருந்தேன்.
எனக்கும் சொந்தம் என்பதை புரிய வைத்தாய்.

உன்னை முழுவதுமாக உடனடியாக
வேறு ஒருவருக்கு என்னால்
விட்டுத்தர முடியாது அன்பே.

என் மனதை மாற்றிக்கொள்ள
சற்று கால அவகாசம் கொடு உயிரே.



கவிஞர் ஜோதி,பெரிய குமாரபாளையம்

# வலி கொடியது

பசிச்ச வயிறு கிள்ளி எடுக்க
பாவி மவ சுருண்டு கெடக்கா.

எட்டி கிடக்கிற செம்பு தண்ணிய
எட்டி எடுக்க கூட தெம்பு இல்ல.

கிழிஞ்ச சேலை ஒன்னு காத்துல ஆட.
கிறுக்கு பய மவ வேடிக்கை பார்த்து சிரிக்கிறா.



ஓட்ட போட்ட சேலை ஒன்னு
அவ உடம்ப ஒட்டி கெடக்கா.

ஒட்டியாணம் ஒன்னு வேணும்னு
பக்கத்து வீட்டுக்காரி கூப்பாடு போடுறா.

கால் வயிறு கஞ்சி கிடைக்காத உடம்புக்கு
கண்ணு ரெண்டும் சொருகிப் போய் கெடக்கு.

பூசி வைச்ச அடுப்பு ஒன்னு
கரையான் வயித்துக்கு பசியா போச்சு.

அடகு வைச்ச அண்டா ரசீது அலமாரில கெடக்கு.
அடகு வைக்காம ஒன்னு மட்டும் அவ கழுத்துல கெடக்கு.

காப்பி தண்ணி போடக்கூட கையில காசு இல்ல.
கடுங்காப்பி போட டீ தூள தேடுறா.

வலி கொடியது தான்.

கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# காதல் நீதானே

நீ யார் எதற்காக வந்தாய்
என் மனதை பறித்தாய்
சுகமாக இருந்த வாழ்க்கை இன்று
உன் நினைவாக மாறிவிட்டது
பார்க்கும் இடமெல்லாம் உன் முகம்
தெரிந்துவிட்டது
உன் நினைவுகள் என்னோடு கலந்து விட்டது
உன் முகம் பார்க்க என் மனம்
தவிக்கிறது
பூர்வ ஜென்ம பந்தம்மா
இல்லை ஏழு ஏழு ஜென்மம் வாழும்
சொந்தம் மா
நான் நேசிக்கும் நெஞ்சம் மா
உன்னிடத்தில் நான் தஞ்சம் மா
இமை நொடியும் மறக்க
முடியாவில்லை
காதல் உன்னிடம் நான் எப்படி
சொல்வது என்று எனக்குத்
தெரியவில்லை
சொல்ல வார்த்தை வரவில்லை
சந்தித்த முதல் நாள் என்னை
தொலைத்து விட்டேன்
மறைந்து இருந்து உன்னை ரசித்து விட்டேன்
என் மௌனத்தை தொலைத்து
காதல் சொல்லி விட்டேன்
உன் வார்த்தைகாக காத்திருக்கும்
நெஞ்சம்
ஒரு வார்த்தை சொல்வாயா கொஞ்சம்



கவிஞர் சௌ.தாரா,சேலம்

# முத்தம்

வலதுகை இடதுத் தோள் பட்டையில் தொட்டும்,
பின்
வலதுத் தோள் பட்டையில்
தொட்டும்,
பின்
இதயத்தில் பட்டப் பின்பு
முறையே
பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்
"பெயராலே"
எனச் சொல்லி முடிக்கும் போது
இறுதியாய்
ஆள்க் காட்டி விரல்
உதட்டை தொடும் போது
உலகுக்கு உணர்த்துகிறது
அன்பே பெரியதென்று.



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்

## (பாகம் மூன்று)

திருத்தலங்கள் தோறும் திருப்பதிங்கள் பாடுகிறார் சம்பந்தர்
திருப்பாதங்களால் நடந்தும், முத்துச் சிவிகையிலும் பயணம்
பெருகிவரும் பக்தர்கள் பாலகனை வணங்கிச் செல்கிறார்கள்
திருவிழாபோல் சம்பந்தரைக் கொண்டாடி மகிழ்கிறார்கள்

திருநீலதக்க நாயனார் சம்பந்தரை தம் இல்லம் அழைக்கிறார்
தெருவெல்லாம் தோரணங்கள், வாழை, கமுக மர அலங்காரம்
வரும் வழிகளில் எல்லாம் பூரண கும்பங்கள் தீப ஆராதனைகள்
திருக்கோயில் அயவந்தீஸ்வரரைப் போற்றி திருப்பதிகம் பாடினார்

சிறுத்தொண்ட நாயனார் அழைப்பை ஏற்று அவரைக் காண வருகிறார்
மறுவார்த்தை கூறாமல் அவர் மாளிகையில் சில நாட்கள் தங்கினார்
கறுக்களில் எழுந்து விருந்து உபச்சார பணிகள் உளமார செய்கிறார்
வெறுமையிலும் முழுமை காணும் இனிய தமிழ்ப் பதிகங்கள் பாடினார்

அந்நாளில் ஒரு வணிகன் ஓர் பெண்ணுடன் ஆலய மடத்தில் தங்கினான்
வந்த களைப்பில்  அசந்து தூங்கினான் , அரவம் ஒன்று ஊர்வது அறியாது
அந்த அரவம் அவனைத் தீண்டிச் செல்லஅவன்  உயிருக்குப் போராடினான்
பந்தம் என்று நம்பி வந்தவன் நிலை கண்டு கண்ணீர் விட்டுக்  கதறினாள்

அன்னையையும் அத்தனயும் பிரிந்து உன்னை நம்பி வந்தேனே
என்னை உயிர் விட்டு அகன்றாய் யான் இனி என் செய்வேன் இனிமேல்
மன்னிய சீர் வணிகர் குல மணியே என்னைத் தவிக்கவிட்டுச் சென்றாயே
கன்னி அவள் சிவன் கோயில் திசை நோக்கி செயல் மறந்து அழுதாள்

அடியார்கள் கூட்டம் உய்ய ஆலகால விடத்தை  உண்ட திருநீலகண்டனே
நெடியோனும் நான்முகனும் அடிமுடி காணாத ஆனந்த தாண்டவக் கோனே
கடினமான மன்மதனை எரிக்க புலம்பிய ரதிதேவிக்கு அருள் புரிந்தவனே
பொடியான என் வாழ்க்கைப்  பிழை நீக்கி  உயிர் பிச்சை அளிப்பாயாக

வைப்பூருக்குத்  தலைவன் தாமன் பெற்றெடுத்தான் ஏழு மகள்கள்
ஐந்து பெற்றாலே ஆண்டியாகும் அரசன் ஏழு பெற்று தரித்திரமானான்
தையல்கள் அவரவர் விருப்பமின்றி தனம் பெற்று திருமணம் செய்தான்
மையல்கொண்ட அவள் வணிகன் கை பிடித்து அவன் பின்னே வந்தாள்

சிக்கென அவன் கை பிடித்து வந்த  பேதை அவிழ்ந்துவிட்ட  சரமானாள்
இக்கணம் உன்னை விட்டால் வேறு யார்கதி எனக்கு?, கோயில் சென்றாள்
தக்க சமயத்தில் அங்கு வந்த தமிழ் மகன் புலம்பும் பேதையைக் கண்டான்
இக்கன்னி கண்ணீருக்கான காரணம் எது? அறிந்த பிள்ளை மருளவில்லை.

இவ் வணிகனை நேசித்தேன் திருமணம் செய்யவே நான் இங்கு வந்தேன்
செவ்விய நோக்கம் ஈடேறும்முன் கப்பல் கவிழ்ந்ததுபோல் தனியனானேன்
பவ்வியமாக வாழ ஆரம்பிக்கும் முன்னே பாவம் அறியாது பாவியானேன்
எவ்விதம் முடியும் என் வாழ்க்கை ஊன்றுகோல் அற்ற கொடியானேனே

விடையானை வெண் நீற்றானை புரம் மூன்றும் எரித்த ஈசனே பரமனே
தடையில்லாமல் இப்பெண்ணின் துணைவனை உயிர்த்தெழச்செய் வாய்
மடை இல்லாமல் '' ஒள்ளிழையார் உள்மெலிவு '', எனும் பதிகம் பாடினார்
இடையில் நடந்தது ஏதும் அறியாது உறங்கி விழித்தவன்போல் எழுந்தான்.




...தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# முதுமையில் தனிமை

மனது முழுக்க பாரம்
தனியாக இருக்கிறேன் ஒரு ஓரம்

உறவினர்கள் எல்லாரும் இருக்கிறார்கள்
ஆனால் என் வீட்டிற்கு மட்டும் வர மறுக்கிறார்கள்

முதியோர் இல்லம் செல்ல மறுக்கிறேன்
தினம் தினம் இறைவனிடம் விண்ணுலகம் செல்ல தொழுகிறேன்

பிள்ளைகள் எல்லாம் வெளிநாட்டில்
நானோ வசிக்கிறேன் தனி வீட்டில்

மாத்திரை மருந்து தான் உணவு
வாழ்வதற்குள் என் பிள்ளைகளை பார்ப்பதே கனவு.



கவிஞர் விக்னேஷ்,வேலூர்

# செய்நன்றி அறிதல்

**நன்றியை மறவாது** **அதிகாரம் 11**

உதவி என்றறியாமல் நாம் செய்யும் உதவியானது
வானத்தையும் பூமியையும் விட பெரியதே.

ஒருவர் பெருந்துன்பம் நமக்கு செய்து இருந்தாலும்
கடுகளவுவேனும் நன்மை செய்திருப்பின்
அதை எண்ணுவதே சாலச் சிறந்தது




செய்நன்றி மறந்தோர் வாழ்வில்
உயர்வு நிலை பெற இயலாதே

திணையளவு உதவி செய்திருந்தாலும்
அதைப் பனையளவு நினைத்து பார்ப்பதே அறமாகும்
இது கடலினும் பெரிதாகுமே

நன்மை செய்வோரை என்றும் மறவேல்
தீமையை உடனே மறப்பது நன்றாதாகும்
உதவி செய்வோரை மறந்தோம் எனில்
நமக்கு முக்தி இல்லையே.

நட்பை போற்றுவோம் செய்த நன்றியை நினைவில் கொள்வோம்.
தீமைகளைத் தீயிலிட்டு பொசுக்குவோம்

நல்ல மனிதனாக வலம் வருவோம்

கவிஞர் சுமதி தசரதன் சென்னை

# இளைஞனே!

வாழ்க்கைப்பயணம்
உனக்கொரு
வளைவு நெளிவு கொண்ட
பயிற்சிப் பாசறை



மேடுபள்ளங்களைத் தாண்டி
வெல்லும்
பயிற்சியில் உள்ளது
உன் வாழ்வின் வெற்றி

இருளும் ஒளியும்
உனக்கொரு வரம்
இரவில் நன்றாய் யோசி
பகலில் செயற்படு

உணவும் நீரும்
உனக்கான எரிபொருள்
அளவோடு உண்
தாகம் தீரும் வரை பருகு

நாளும் பொழுதும்
உற்சாகமாய்ப் பயணி
அடுத்தவர் விமரிசனங்கள்
அவரவர் பார்வை

அவை ஒருபோதும்
உனதன்று முன்னேறு
நீ என்றும்
நீயாகவே இரு

உன் நிழலே எப்போதும்
உனைத் தொடரும்
உனக்காய் யாரும்
காத்திருக்கப் போவதில்லை

ஆனால், ஒன்றை
மட்டும் மறவாதே
உன் நிழல்
உன்னைத்தொடரவும்
வெளிச்சம் வேண்டும்

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,கம்பளை

# ஜென் கதை

கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி கிராமத்தில் இயங்கி வரும் அரசு உண்டு உறைவிடப்பள்ளி உள்ளது.

பள்ளியில் உலக யோகா தினத்தை முன்னிட்டு அதே பகுதியில் வாழும் ஜென் துறவி ராகுலன், அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு இருந்தார்.

அவர் யோகா பயிற்சி முறைகளை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.
பிறகு அவர்களோடு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாணவச் செல்வங்களே! " உங்களின் எதிர்கால குறிக்கோள் என்னவென்று கூறுங்கள் ?"

மாணவன் நிர்மல், "ஐயா நான் உங்களை போல் ஒரு ஜென் துறவியாக விரும்புகிறேன்"என்றான்.

ஜென் குரு மௌனமாய்.

மாணவன் சுரேஷ்," என்னுடைய அப்பா என்னை அப்துல் காலம் போல் ஒரு விஞ்ஞானியாக வேண்டும்" என்று கூறி இருக்கிறார் ஐயா.அது தான் என்னுடைய குறிக்கோளாக இப்பொழுது இருக்கிறது.

ஜென் குரு மௌனமாய்.

மாணவி யசோதரை, "என்னுடைய பாட்டியின் கனவு, நான் ஐஸ்வர்யராய்ப் போல் உலகம் அழகி ஆகுவதே!." என்றாள்.

ஜென் குரு மௌனமாய்.

மாணவன் இருளப்பன், "மகாகவி பாரதியாரைப் போல் ஒரு கவிஞராக விரும்புகிறேன். எனது எழுத்துகளால் சமூகத்தில் பல புரட்சிகளைச் செய்வேன் !"என்று முடித்தான்.



ஜென் குரு,
"ஒவ்வொரு நத்தையும்
ஒவ்வொரு பாதையில்..."
என்று சொல்லி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

மாணவன் தாமு, "எனக்கு ஓவியம் வரைவதில் ஆர்வம் அதிகம்.ஆகையால்,அதையே சிறப்பாகச் செய்து, என் வழியில் பயணிப்பேன் ."என்று அவனது நண்பன் காதில் முணுமுணுத்தான் ஜென் குரு கேள்வி கேட்டதுமே!.

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# மங்களம் உண்டாகட்டும்

**(சிறுகதை)**



எல்லோரும் அவசரமாக தங்கள் பணிக்காக ஓடிக்கொண்டிருந்த காலைநேரம். மும்பை தாராவி நேரு நகரில் வாடகை வீட்டில் தங்கியிருந்த ரவியிடம் அம்மா "மீனா உன் காதலி வீட்டிலிருந்து யாரும் எதுவும் கேட்கவரல. ஊரிலிருந்து நான்வந்து ஒருமாசமாச்சு. இன்றைக்கு மத்தியானம் இரயிலில் ஊருக்குப் போகிறேன். எதிர்வீட்டிலிருந்து கிட்டு ஒருநாளாவது வந்து பேசியிருக்கலாமில்லியா?" என்று கேட்டாள்.

"என்னம்மா. நாம் மாப்பிள்ளை வீட்டுக்கார நம்மவந்து பேசணும்னு நெனச்சிருப்பாங்க."
"அவங்க வந்து பேசறதா தானே உன் லவ்வர் தேவி சொன்னதா சொன்னாய்."
"என்ன பிரச்சினையோ. தெரியல. நீ கௌம்பு. டிரெயினுக்கு நேரமாச்சு."
"அப்படீன்னா ஊரிலேபோய் நான் வேற பொண்ணுப் பார்க்கவா?"
"ஒண்ணும் வேண்டாம். நான் அவங்களப் பார்த்துப் பேசி, ஊருக்கு வந்து உன்னையும் அப்பாவையும் பார்க்கச்சொல்கிறேன்" என்றவன் டாக்ஸி பிடித்து வி.டி. ஸ்டேஷனுக்கு வந்து அம்மாவை வழியனுப்பி வைத்தான்.

மறுநாள், ரவிதேவியைச் சந்தித்தபோது, "ஏன் தேவி உங்க அம்மா எங்கஅப்பாகிட்டே வந்துபேசப் போறதாதானே சொன்ன. அப்புறம் என்னாச்சு?" என்று கேட்டான் ரவி.
"வீட்டிலே என்தங்கச்சி எங்கேயோ மாட்டிக்கிட்டு... விடு ரவி. இப்ப என்ன செய்யலாம். பேசாம... ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாமா?"
"நான் வீட்டுல கடைசிபையன். எல்லோரும் என் கல்யாணத்த ஜாம்ஜாமுன்னு நடத்தணும்னு எதிர்பார்க்கிறாங்க. நீ ஒண்ணு பண்ணு. நான் நாளைக்கு ஊருக்கு கௌம்புறேன். நான் தார நம்பர்ல உங்க அப்பாவை நாளை மத்தநாள் கூப்பிட்டுப் பேசச்சொல்லு." என்று தொலைபேசிஎண் கொடுத்துவிட்டு கிளம்பினான்.

ரவி ஊருக்கு வரும்போது வீடு திருமண களைக்கட்டியிருந்தது. பந்தல் எல்லாம் போட்டிருந்தது. 'யாருக்குத் திருமணம்?' என யோசித்துக்கொண்டே வந்தபோது "மாப்பிள்ளை வந்தாச்சு" என்ற ரவியின் மாமா (மீனாவின்தம்பி)
நேராக அம்மாவிடம் போய் "என்னம்மா யாருக்குக் கல்யாணம்?" என்றான் ரவி.

"எல்லாம் உனக்கும் உன் மாமா பொண்ணு திவ்யாவுக்குந்தான். சும்மா லவ்வுகிவ்வுன்னு ஏதாவது சொன்ன.. அப்புறம் நடக்கிறதே வேற. ஒழுங்கா திவ்யா கழுத்துல தாலியக் கட்டிகிட்டு இங்கே உள்ள வெவசாயத்தைப்பாரு. இல்லை, நான் தூக்கில தொங்குவேன்." என்று அம்மா கத்தியபோது அதிர்ந்து நின்றான் ரவி.

**கவிஞர் இரஜகை நிலவன்,மும்பாய்**

# அ.ச.ஞானசம்பந்தன்

கட்டுரை



அ.மு.சரவண முதலியார் - சிவகாமி அம்மையார் தம்பதிக்கு மூத்த மகனாக 1916 நவம்பர் 10 ஆம் தேதி திருச்சி, கல்லணையை அடுத்த அரசங்குடியில் பிறந்தார். தந்தையே தமிழாசிரியராக இருந்ததால் தொடக்கக் கல்வியை அவரிடமே பயின்றார். 1930வரை திருச்சியிலும் பின்னர் தந்தை பணியாற்றிய லால்குடி பள்ளியில் 1935-ல் பத்தாம் வகுப்பையும் முடித்தார்

ஒன்பதாவது வயதில் திருச்சியை அடுத்த துறையூரில் நடைபெற்ற சைவ சமய மாநாட்டில் முதல் முறையாக மேடையேறிப் பேசும் ஆற்றலைப் பெற்றதில் வியப்பேதுமில்லை. 1927-ல் ஞானசம்பந்தனின் பேச்சைக் கேட்டுச் மகிழ்ந்த ம.ரா.குமாரசாமிப் பிள்ளை, தாம் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அவருக்கு அணிவித்துப் பாராட்டினார்.

1931-ல் தூத்துக்குடியில் 'செக்கிழுத்த செம்மல்' வ.உ.சிதம்பரம் பிள்ளை ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுபிள்ளை உள்பட அறிஞர்கள் கலந்து கொண்டு பல உரையாற்றினர். இதில் குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவெனில் 'சொல்லின் செல்வர்' ரா.பி.சேதுபிள்ளை பேசி முடித்த உடனேயே அரங்கம் காலியாகிவிடுவது வழக்கம். அடுத்து வருபவரின் பேச்சைக் கேட்க ஆளிருக்காது என்பதால் எல்லா மேடைகளிலும் ரா.பி.சேதுபிள்ளையைக் கடைசியாகத்தான் பேசச் சொல்வார்கள். ஆனால், வ.உ.சி.கூட்டிய கூட்டத்தில் ஞானசம்பந்தன் கடைசியாகப் பேசும் படியாகிவிட்டது. ஆனால், என்ன ஆச்சரியம்... ரா.பி.சேதுபிள்ளையின் பேச்சைக் கேட்டு முடித்ததும் சுலையத் தொடங்கிய கூட்டம் ஞானசம்பந்தனின் கணீர் குரலையும் நாவன்மையையும் கேட்டதும் அப்படியே திரும்பி வந்து உட்கார்ந்து கேட்டு மகிழ்ந்தது!

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கணிதம், இயற்பியல். வேதியியல் ஆகிய சிறப்புப் பாடங்களில் இடைநிலை வகுப்பில் தேர்ச்சி பெற்றதைத் தொடர்ந்து 1937-ல் பிஏ ஆனர்ஸ் (இயற்பியல்) வகுப்பில் சேர்ந்தார். அப்போது தமிழ்த் துறைத் தலைவராக இருந்த நாவலர் சோமசுந்தர பாரதியாரும் தந்தை சரவண முதலியாரும் தமிழை முதல் பாடமாக எடுத்துப் படிக்குமாறு ஆலோசனையும் அறிவுரையும் வழங்கவே இயற்பியல் துறையிலிருந்து தமிழுக்கு மாறினார்.

ஞானசம்பந்தன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் நாவலர் வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார். நாவலர் சோமசுந்தர பாரதியார், மகாவித்வான் இராகவையங்கார், ரைட் ஆரைபிள் சில்வர் டங்க் சீனிவாச சாஸ்திரியார் ஆகியோர் பேராசிரியர்களாவும் வழிகாட்டிகளாகவும் திகழ்ந்தனர்.

# அ.ச.ஞானசம்பந்தன்

கட்டுரை

கர்நாடக இசை மேதை எஸ் இராமநாதன், கம்யூனிஸ்ட் தோழர் கே பாலதண்டாயுதம், பேராசிரியர் க அன்பழகன், நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் இவருடன் படித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

தந்தையின் எதிர்ப்பையும் மீறி ராஜம்மாள் என்பவரைக் கலப்பு மணம் புரிய முடிவெடுத்தார். இதன் காரணமாக அவரது தந்தை பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டணத்தைக் கொடுக்க மறுத்ததுடன், தாவலர் வேங்கடசாமி நாட்டாரும் எந்த உதவியும் செய்யக்கூடாது என்று தடுத்துவிட்டார். எனவே வேறு வழியின்றி ராஜம்மாளின் தங்க வளையல்களை வங்கியில் அடகு வைத்தாவது அறுபது ரூபாய்த் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த ஞானசம்பந்தன் முடிவெடுத்தார். சந்தேகப்பட்ட வங்கி அதிகாரி காவல் துறை அதிகாரிக்குத் தகவல் தெரிவிக்க, அவர் துணைவேந்தரிடம் விவரங்களைக் கூறினார். தேர்வுக் கட்டணத்தைத் துணை வேந்தராக இருந்த சீனிவாச சாஸ்திரியாரே கட்டி உதவினார்.



1942 முதல் 1956வரை பதினான்கு ஆண்டுகள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றியபோது 'இலக்கியத் திறனாய்வு' என்னும் பிரிவை அறிமுகப்படுத்தினார். அப்போது அமெரிக்கத் தகவல் மையம் 'ஹென்றி டேவிட் தொரோ' என்பவரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழில் மொழிபெயர்க்கத் திட்டமிட்டு அதற்கான பணிகளைத் தமிழக அரசிடம் ஒப்படைத்தது.

1856 - 1939வரை சென்னை. அகில இந்திய வானொலி நிலையத்தில் நாடகத் தயாரிப்பாளராகப் பணியாற்றியபோது சிலப்பதிகாரம், மணிமேகலை. கலிங்கத்துப் பரணி, கம்ப ராமாயணம் உள்ளிட்ட தமிழ் இலக்கியங்களை நாடகங்களாக்கினார்.

1959-1962-ல் அப்போதைய கல்வி அமைச்சர் சி சுப்பிரமணியம் வேண்டுகோளை ஏற்று மத்திய அரசின் வானொலி நிலையப் பணியிலிருந்து விடுவித்துக்கொண்டு, தமிழக அரசின் செய்திப் துறையில் மொழிபெயர்ப்புப் பிரிவு துணை இயக்குனரானார்.

1962 - 1963-ல் தமிழ் வெளியீட்டுத்துறையின் பொதுச் செயலராகவும் 1963-67-ல் தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறை இணை இயக்குனரகாவும் 1967-1970-ல் தமிழக அரசு தமிழ் வெளியீட்டுத் துறை இயக்குனராகவும் பல்வேறு பொறுப்புகளைத் திறம்பட வகித்தார். தமிழ்நூல் வெளியீட்டுப் பிரிவில் பணியாற்றியபோது சற்றேறக் குறைய 375க்கும் மேற்பட்ட அறிவியல் நூல்களைத் தமிழில் வெளிட்டார்.

# அ.ச.ஞானசம்பந்தன்

கட்டுரை

1970-73-ல் மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் தெ.போ.மீனாட்சி சுந்தரனார் விருப்பத்துக்கு ஏற்பத் மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

’கம்பன் ஒரு புதிய பார்வை’ என்ற நூல் அவருக்குச் சாஹித்ய அகாதமி பரிசைப் பெற்றுத் தந்தது. முப்பதுக்கும் மேற்பட்ட பெருமக்கள் குறித்த பதிவே இவர் எழுதிய ’நான் கண்ட பெரியவர்கள்’ என்னும் நூலாகும்.




எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது தமிழர்களின் நீண்ட காலக் கனவாக இருந்த ’தமிழ்ப் பல்கலைக்கழகம்’ தஞ்சையில் நிறுவப் பட்டது. அதன் முதல் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம். வேதங்களுடன் ஒப்பிட்டுப் பெரிய புராணத்தை ஆய்வு செய்யும் மிகப் பெரிய பொறுப்பை அவர் அ.ச. ஞானசம்பந்தனிடம் ஒப்படைத்தார்.

சேக்கிழார் 63 நாயன்மார்கள் வரலாற்றைக் கூறப் ’பெரிய புராணம்’ என்னும் நூலை இயற்றினார் என்பதை ஆய்வு முடிவாக வெளியிட்டார் அ.ச.ஞானசம்பந்தன்.

இவர் எழுதிய மொத்த நூல்கள் 35. மொழிபெயர்ப்புகள் 3. ஒவ்வொன்றும் பலாச்களை என்றாலும். இவற்றுள் கம்ப இராமாயணத்தை ஆய்ந்து எழுதிய 8 நூல்கள் (’இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்", ’கம்பன் கண்ட நாடும் மன்னனும், அரசியர் மூவர்", "’தம்பியர் இருவர்’, ’கம்பன் கலை’, ’கம்பன் புதிய பார்வை’ "பன்முக நோக்கில் இராமன்’, ’கம்பன் எடுத்த முத்துக்கள்"), பெரிய புராணத்தை ஆய்ந்து எழுதிய 3 நூல்கள் (’தேசிய இலக்கியம்’. "சேக்கிழார் தந்த செல்வம்’, ’பெரிய புராணம் ஓர் ஆய்வு") மற்றும் ’திருவாசகச் சிந்தனைகள் ஆகியவை தேனில் ஊறிப் பாலில் வீழ்ந்த பலாச்சுளைகளாகும்.

சொற்பொழிவாளர், எழுத்தாளர், திறனாய்வாளர், படைப்பாளர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முகத் திறமை கொண்ட அ.க. ஞானசம்பந்தன் 27.8.2002-ல் தனது 85 ஆவது வயதில் மறைந்தார். அவரது நினைவைப் போற்றும் வகையில் அடுத்த ஆண்டு அவருக்குச் ’சிறப்பு அஞ்சல் உறை வெளியிட்டு அரசு பெருமைப்படுத்தியது.

நன்றி: தமிழ் அறிஞர்கள் - ஜனனி ரமேஷ்

கவிஞர் அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
எங்கே இருக்கின்றீர்களோ அங்கிருந்தே,
எதை வைத்துள்ளீர்களோ
அதைக்கொண்டு, உங்களால் என்ன
முடியுமோ அதை செய்யுங்கள்.
/Aagaramuthalaa
/www.aagaramuthalaa.com
AAGARAMUTHALAA NEWS
அகர முதல செய்திகள்

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

**என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,**

**அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை**
**அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.**


**தொடர்பிற்கு:**

**9597887847/8870884969**

www.அகரமுதல.com agaramuthalaa

aagaramuthala@gmail.com